விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 020 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 24 புதன்கிழமை (08.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



## இந்தியப் பிரதமர் மோடி இலங்கை வருகிறார் இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த வருடத்திற்குள் இலங்கைக்குப் பயணம் செய்வார் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஆசிரியர்களுடன் நேற்றுச் செவ்வாய்க்கிழமை 15

## புதிய அரசியல் கலாசாரத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் - சஜித்

(கொழும்பு)

புதிய அரசியல் கலாசாரத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்ப்புகள் நிறை வேற்றப்படும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள் ளார்.

புதுவருடத்தின் முதலாவது பாராளு மன்ற அமர்வில் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "மக்களின் இறையாண் மையைப் பாதுகாப்பதில், 15

# வழங்கிய வாக்குறுதிகளை அநுர அரசு மீறுகின்றது

## சபையில் ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



(கொழும்பு)

**தேர்தலுக்கு முன் அநுர அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை மீறுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தி யுள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரை யாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தனிநபர்களுக்கான வருடாந்த வரிச்சலுகை எல்லை 12 இலட்சம் ரூபாயிலிருந்து 27 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்படும் என ஆட் சிக்கு வருவதற்கு முன்னர் தற் போதைய ஆளும் தரப்பினர் கூறி யிருந்தனர்.

இதனை நம்பிய சகல 15

## யாழ்.நகரில் இளைஞன் மீது தாக்குதல் மேலும் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் புத்தாண்டுக்கு முன்னிரவு இளைஞர் மீது கொலைவெறித் தாக்குதல் நடாத்தியவர்களில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர் களில் மூவர் நேற்றுச் செவ் வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர். 15

## யாழ்.சர்வதேச விமான நிலையத்தில் வரிச்சலுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வதேச விமான நிலையத்தில் முன்னெடுக்கப் படும் வரிச்சலுகையை நீடிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி யாழ்ப் 15

## நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

2016ஆம் ஆண்டுக்கும் 2020ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இடைநடுவில் நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக் கப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் 15

## முகமாலையில் நீரில் மூழ்கிய ஒருவர் மரணம்

(முகமாலை)

முகமாலையில் வெள்ள நீரில் மூழ்கிய ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

நேற்றுக் காலை 9.30 மணி யளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் முகமாலை வடக்கு பளையைச் சேர்ந்த மாணிக் கம் உதயகுமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

முகமாலை வடக்குப் பகுதி யில் ஆட்கள் நடமாட்டம் குறைந்த வீதியினால் பய ணித்தபோது வீதியில் தேங்கிக் காணப்பட்ட 15

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு இருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு கல்கிசை - வட் டரப்பல வீதியில் நேற்று அதி காலை இடம்பெற்ற துப்பாக் கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரி ழந்தவர்களின் எண் ணிக்கை 2ஆக 15

## யாழ்ப்பாணம் – கொழும்புக்கு மேலதிகமாக இரு புகையிரத சேவைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும் புக்கு மேலதிகமாக இரு புகை யிரதச்சேவையினை ஆரம்பிக் கவுள்ளதாக வன்னிப் பாராளு மன்ற உறுப்பினர் ஜெகதீஸ் வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், நீண்டகாலமாக 15

## இந்து மதக் குருக்கள் மீது கிளிநொச்சியில் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகாம்பி கைக்குளம் பகுதியில் இந்து மதக் குருக்கள் ஒருவர் மீது கடுமையான தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதில் கனகாம்பிகைக் குளம் முருகன் வீதியைச் சேர்ந்த சிவஸ்ரீ சிவகுமாரன் குருக்களே தாக்குதலில் படு காயமடைந்த நிலையில் கிளி நொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் கிராம அலுவலர் அலு வலகத்தில் நேற்றுப் பகல் 11 மணியள 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(2960)




# கிழவன்காடு கலாமன்றம்

**காரைநகர் - யாழ். கிளை நடாத்தும்**

## தெய்வீக கலையரங்கு

(திருவெம்பாவை 6 ம் நாள்)

## அழைப்பிதழ்

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு காரைநகர்.

காலம் : 09.01.2025 வியாழக்கிழமை பி.ப 4.00 மனி

**நிகழ்ச்சிகள்**

- மாணிக்கவாசக சுவாமிகள் மண்டபத்திற்கு எழுந்தருளல், தீபாராதனை
- வேதபாராயணம் - ஈழத்து வேதவிற்பன்னர்கள்
- திருவாசகம் ஓதல் :- "திருவாசக்குயில்" காரை லீலாவதி இராசரத்தினம் (கலாமன்ற இசை ஆசிரியர்)
- இசைக்கச்சேரி :- திரு. தவநாதன் றொபேட் (தலைவர், இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
- சொற்பொழிவு :- அறவழிநாயகன், கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
- அரச நடன போட்டியில் தேசிய ரீதியில் 2ம் இடத்தினைப் பெற்ற கலாமன்ற ஆசிரியர் மற்றும் மாணவர்களைக் கௌரவித்தல்
- கலாமன்ற நடனத்துறையினர் வழங்கும் "நாட்டியார்ப்பணம்"

குறிப்பு : நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பிப 3.30 மணிக்கு ஆரம்பமாகும். (இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம். யாழ் வண்ணை சிவன் கோயில் அருகாமை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ்ப்பாணம் (C-1978)

## முன்னாள் மருத்துவ பீடாதிபதி இராஜேந்திரப்பிரசாத் காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி இராஜேந்திரப்பிரசாத் நேற்றுக் காலமானார்.

அவரின் பூதவுடல் அவரின் விருப்பப்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திற்கு நேற்றைய தினமே கையளிக்கப்பட்டது. (ம-7)

## புதிய இராஜதந்திரிகள் ஐவர் ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

இலங்கையைபிரதிநிதித்துவப்படுத்துவதற்காக உயர்ஸ்தானிகர் ஒருவரையும் நான்கு தூதுவர்களையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வைபவத்தின் போது ஜனாதிபதி உத்தியோகபூர்வ நியமனங்களைக் கையளித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நியூசிலாந்திற்கான உயர்ஸ்தானிகராக டபிள்யூ.ஜி.எஸ் பிரசன்னவும், கட்டாருக்கான தூதுவராக ஆர்.எஸ்.கான் அசார்ட், ரஷ்யாவுக்கான தூதுவராக எஸ்.கே.குணசேகர, குவைத்துக்கான தூதுவராக எல்.பி.ரத்நாயக்க மற்றும் எகிப்திற்கான தூதுவராக ஏ.எஸ்.கே.செனவிரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, இராஜதந்திரிகளின் திறன்களில் நம்பிக்கையை வெளிப்படுத்தியதுடன், இலங்கையின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதிலும் அந்தந்த நாடுகளுடன் ஒத்துழைப்பை வளர்ப்பதிலும் அவர்களின் தேவையை சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு, தென் கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் கணிசமான எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்தோர் பணிபுரியும் இலங்கையர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்கு இலங்கையின் இராஜதந்திரிகளின் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (ம-7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின்
விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்

## திரு. மகேந்திரன் வாகீசன்



அவர்கள் இலங்கை கரப்பந்தாட்ட நடுவர் சம்மேளத்தின் தேசிய மட்ட பரீட்சையில் B தரச் சித்தியடைந்தமையினையிட்டு வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர்...
ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
(2958)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1942 - 11 - 07 | 2025 - 01 - 05 |

## திருமதி நடராசா குலக்கொழுந்து (கொழுந்து)

துன்னாலை தெற்கு கிளானையைப் பிறப்பிடமாகவும் தச்சந்தோப்பு வீதி கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னையா நடராசா(சந்திரவளவு) அவர்களின் அன்பு மனைவியுமான திருமதி நடராசா குலக்கொழுந்து(கொழுந்து) அவர்கள் 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் கணேசலிங்கம்(கிளி - லண்டன்) காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி(கணேஸ்), குலவீரசிங்கம்(குலம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வராசா, பாக்கியம், சிவராசா(சிவம்), வசந்தமலர், தவமணி, இராசமலர் மற்றும் காலஞ்சென்றவர்களான சின்னாச்சி, தங்கராசா, தங்கம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி(கொழும்பு), விக்னேஸ்வரி(நோர்வே), விக்னேஸ்வரன்(லண்டன்), விஜயகுமாரி(கரவெட்டி), விக்கினராஜா(பிரான்ஸ்), விஜயலலிதா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நித்தியகல்யாணி (கொழும்பு), சிவசுப்ரமணியம்(நோர்வே), விஜயலக்சுமி(லண்டன்), தர்மராஜா(கரவெட்டி), நிரஞ்சினி(கவிதா - பிரான்ஸ்), தயாபரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2025) புதன்கிழமை காலை 10 மணியளவில் புதிய அம்பம் வைத்தியசாலை அருகில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தச்சந்தோப்பு மத்தி, கரவெட்டி. (C-1974) தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 - 10 - 1936 | 07 - 01 - 2025 |

## இளையதம்பி சொக்கலிங்கம்

**(ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர்)**

நாவற்குழி மேற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சொக்கலிங்கம் அவர்கள் நேற்று (07.01.2025) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் ஐயாத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் மனமல்லி, காலஞ்சென்ற ஜனகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரன் (கனடா), காலஞ்சென்ற விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருசாந் (கனடா), உமையாள் (கனடா), ஞானக்குமரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கனகரத்தினம் மற்றும் மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராமச்சந்திரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (08.01.2025) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாவற்குழி மேற்கு, கைதடி (2956) தகவல் : குடும்பத்தினர் 077 375 4403

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகள் எவரையும் அநுர அரசு பாதுகாக்காது

## உறுதிபடத் தெரிவித்தார் நீதி அமைச்சர்

(கொழும்பு)

குற்றவாளிகள் எவரையும் இந்த அரசு பாதுகாக்காது, அவர்கள் தப்பித்து ஓடவும் முடியாது சட்டம் தன் கடமையைச் செய்யும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.



"கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "குற்றவாளிகள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். எனவே அவசரப்பட வேண்டாம் சட்டம் தன் கடமையைச் செய்யும்.

இதில் அரசியல் தலையீடு இருக்க முடியாது எனவும் அவர் சுட்டி காட்டியுள்ளார். (நி)

## தரையிறங்க முடியாமல் திணறிய விமானங்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க வந்த நான்கு விமானங்கள் மத்தள மற்றும் இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளன. நேற்றுக் காலை கட்டுநாயக்க பிரதேசத்தில் நிலவிய பனிமூட்டமான காலநிலை காரணமாக இவ்வாறு திருப்பிவிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நேற்று அதிகாலை 5 மணியளவில் டுபாயில் இருந்து வந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் யு.எல்-226 விமானம் சீனாவின் குவாங்சோவிலிருந்து வந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் UL-881 விமானம் இந்தியாவின் பெங்களூரில் இருந்து அதிகாலை 5.05 மணிக்கு வந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் UL-174 விமானம் என்பன மத்தள விமான நிலையத்திற்கு திருப்பிவிடப்பட்டதாக விமான நிலையத்திற்கு பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை சூழ்ந்திருந்த அடர்ந்த மூடுபனி படிப்படியாக குறைந்ததையடுத்து விமான நிலையம் வழமை நிலைக்கு திரும்பியுள்ளதால் விமான சேவைகள் சாதாரணமாக நடைபெறுவதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## நாடளாவிய ரீதியில் 30,000 ஆசிரியர் வெற்றிடங்கள்

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 30,000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் அனைத்து பாடங்களுக்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாக அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார். (நி)

## மிதிபலகையில் பயணிக்கும் நடத்துநர்கள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பேருந்து பயணத்தின் போது நடத்துநர் மிதி பலகையில் பயணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹபுகொட தெரிவித்துள்ளார். இதன்படி, இனிமேல் மிதி பலகையில் பயணிக்கும் நடத்துநர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேருந்து பயணத்தை முன்னெடுப்பதில் காணப்படும் போட்டித்தன்மை காரணமாக சில நடத்துநர்கள் அவதானமின்றி மிதிபலகையில் பயணிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## Tell IGP சேவை மீண்டும் அறிமுகம்

(கொழும்பு)

'Tell IGP' இணைய சேவை இலங்கைப் பொலிஸாரால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒன்லைன் சேவையானது, பொலிஸ் சேவையைப் பற்றிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பொலிஸ்மா அதிபரின் நேரடி கவனத்துக்கு கொண்டு செல்லும் வாய்ப்பினை பொது மக்களுக்கு வழங்குகிறது.

www.police.lk என்ற அதிகாரபூர்வ இணையத்தளத்தில் உள்ள இ-சேவை இணைப்பு மூலம் பொதுமக்கள் தங்களின் முறைப்பாடுகளை பதிவு செய்து, 'Tell IGP' ஐகானைத் தேர்ந்தெடுத்து படிவத்தில் சரியான தகவல்களைப் பதிவு செய்து தங்கள் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம். (https://telligp.police.lk/)

24 மணிநேர சேவையான இந்தச் சேவையின் ஊடாக பொலிஸ் நிலையங்களில் தங்களின் முறைப்பாடுகள் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என கருதுபவர்கள் தமது முறைப்பாடுகளைப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைக்க முடியும். (நி)

## நெல் கொள்வனவு இம்மாத இறுதியில்

(கொழும்பு)

பெரும்போகத்திற்கான நெல் கொள்வனவு இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது என நெல் சந்தைப் படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தற்போது நெல் களஞ்சியசாலைகளைச் சுத்தப்படுத்தும் பணிகள் இடம் பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மூன்று இலட்சம் மெற்றிக் தொன் நெல் களஞ்சியப்படுத்தக் கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அத்துடன் நெல் சந்தைப் படுத்தல் சபை உள்ளிட்ட வர்த்தக அமைச்சுக்குச் சொந்தமான கட்டடங்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த ஜப்பான்

(கொழும்பு)

இலங்கைக்கு தொடர்ச்சியான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஹாரா சொஹெய் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஹாரா சொஹெய் ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

இந் நாட்டில் முன்னெடுக்கப்படும் முன்னணி வேலைத் திட்டமான "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்திற்கு பாராட்டுத் தெரிவித்த சிரேஷ்ட உப தலைவர், அந்த வேலைத்திட்டத்திற்கு அவசியமான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

இந்நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பு மறுசீரமைப்பு மற்றும் நகரத் தூய்மையாக்கல் பணிகளுக்கு ஜயிக்கா நிறுவனத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளக்கூடிய நிதி மற்றும் பௌதீக உதவிகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2025

## சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள்



புதனை இராசிநாதனாகக் கொண்ட கன்னி இராசி அன்பர்களே!

இந்த ஆண்டு அயராது பாடுபடும் உங்களின் மனதைரியம் அதிகரிக்கும். சோம்பேறித் தனத்தை மூட்டைகட்டி வைத்து விட்டு சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள். தாய் வழி உறவுகளில் சுமுகமான நிலைமை ஏற்படும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். பங்காளிகளும் உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்கள். சமுதாய விழாக்களில் பங்கேற்பீர்கள். மற்றபடி எவரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். பிறர் கேட்காமல் அறிவுரை வழங்க வேண்டாம்.

பெரியோரை மதித்து அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வீர்கள். சிலருக்கு விருது, பட்டம் பெறும் யோகம் கிடைக்கும். நுணுக்கமான விடயங்களையும் சரியாகப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உண்டாகும். புதிய சேமிப்புத் திட்டங்களில் சேர்வீர்கள். நகைச் சுவையுடன் பேசி பிறரைக் கவர்வீர்கள். நல்ல எண்ணத்துடன் செயல்களைச் செய்வீர்கள்.

**குடும்பம்:** குழந்தைகள் உங்கள் சொல்கேட்டு நடப்பார்கள். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். செய்தொழிலில் தொடர்ந்து வளர்ச்சியைக் காண்பீர்கள். பிறரின் சொத்துக்களை பராமரிக்கும் யோகமும் சிலருக்குக் கிடைக்கும். நெடுநாட்களாக செய்யாமல் விடுபட்ட குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உங்களின் உள்ளுணர்வுக்கு மதிப்பு கொடுப்பீர்கள்.

சிலருக்கு புண்ணியத் தலங்களுக்கு தீர்த்த யாத்திரை செல்லும் யோகம் கிடைக்கும். நீண்ட நாட்களாக உங்களின் மனதை அரித்துக்கொண்டிருந்த விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும். உங்களின் ஞாபகசக்தியால் முக்கியமான தருணங்களில் சமயோஜிதமாகப் பேசி குடும்பத்தினரின் பாராட்டுகளையும் பெறுவீர்கள்.

**பொருளாதாரம்:** பொருளாதாரத்தில் இருந்த பிரச்சினைகள் அனைத்தும் விலகும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த சுணக்க நிலை அடியோடு மாறும்.

**ஆரோக்கியம்:** உடல் நிலையில் நல்ல மாற்றம் இருக்கும். சோம்பேறித்தனம் அகன்று சுறுசுறுப்பாக வேலைகளைப் பார்ப்பீர்கள்.

**உத்தியோகத்தர்கள்:** உத்தியோகத்தர்களின் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். இடமாற்றங்கள் உங்களுக்கு சாதகமாக அமையும். ஊதிய உயர்வும் நன்றாக இருக்கும். அலுவலகம் தொடர்பான உங்களின் புதிய எண்ணங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவீர்கள். சக ஊழியர்களிடம் ஒற்றுமை அதிகரிக்கும். அவர்களிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்வீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டுகளுக்கும், நல்லெண்ணங்களுக்கும் பாத்திரமாவீர்கள். அரசு மற்றும் தனியார்துறைகளில் பணிபுரிபவர்களின் செயலில் இருந்த மந்தநிலைகள் நீங்கி சுறுசுறுப்பான செயற்பாடுகள் உருவாகும். நிர்வாகத் திறமையை வளர்த்துக்கொள்ள தேவையான பயிற்சிகளை மேற்கொள்வீர்கள். செயற்பாடுகளில் தனித்த திறமையும் நண்பர்களின் ஒத்துழைப்பும் சேர்ந்து மிகுந்த வெற்றி தரும். உத்தியோகத்தில் திருப்தியும் நற்பெயரும் உண்டாகும். சிலர் மேலிடத்தின் நிர்ப்பந்தம் காரணமாக வெளிநாடு செல்வார்கள்.

**வியாபாரிகள்:** வியாபாரிகளுக்கு பொருளாதாரம் நன்றாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் சிறப்பாகவே அமையும். புதிய வாகனங்களை வாங்கி அதன் மூலம் நல்ல வருமானத்தைக் காண்பீர்கள். தேவையில்லாத சில அலைச்சல்கள் ஏற்பட்டாலும் முடிவு சாதகமாகவே அமையும். கூட்டாளிகள் உங்கள் பொறுப்புகளில் பங்கெடுத்துக்கொண்டு வேலைகளைக் குறைப்பார்கள்.

**பெண்கள்:** பெண்கள் குடும்பத்தில் அனுகூலமான நிலைமையைக் காண்பீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உற்றார், உறவினர்கள் இணக்கமாக இருப்பார்கள். பெரியோர்களின் ஆலோசனைப்படி நடந்துகொண்டு இறுக்கமான சூழ் நிலைகளிலிருந்து தப்பித்துக் கொள் வீர்கள்.

**அரசியல்வாதிகள்:** அரசியல்வாதிகள் மக்கள் நலப்பணிகளில் கவனத்துடன் ஈடுபடவும். உங்கள் புகழும், செல்வாக்கும் அதிகரிக்கும். வருமானத்திற்குக் குறைவு வராது என்றாலும் பொதுப் பணிகளுக்காக உங்கள் கைப்பணத்தைச் செலவழிக்கும் முன் யோசனை செய்து கொள்ளுங்கள். எதிரிகளின் முட்டுக்கட்டைகளைத் தகர்த்து வளர்ச்சியைக் காண்பீர்கள். கட்சியில் உங்கள் மதிப்பு உயரும் அதே சமயம் குறுகிய கண்ணோட்டத்தைத் தவிர்க்கவும்.

**கலைத்துறையினர்:** கலைத்துறையினருக்கு சக கலைஞர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். இதனால் படிப்படியாக வளர்ச்சி அடைவீர்கள். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். ஆனாலும் அநாவசியச் செலவுகளைச் செய்ய நேரிடும். சிறு தடங்கல்கள் ஏற்பட்டாலும் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

**மாணவர்கள்:** மாணவர்களுக்கு பெற்றோரின் ஆதரவுடன் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். சக மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவீர்கள். எனவே அவர்களின் பழைய தவறுகளைப் பெரிதுபடுத்த வேண்டாம். குருகுலக் கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் குருவை போற்றி நடந்து அவர்தரும் கல்வியில் ஞான சிந்தனையுடன் செயற்பட்டு முதல் தர மாணவனாக தேர்ச்சி பெறுவார்கள்.




அறிவியல் தொழில்நுட்ப மாணவர்களும் ஆரம்ப நிலை மாணவர்களும் படிப்பினில் ஆர்வம் காட்டி பெற்றோருக்கு நற்பெயர் வாங்கித் தருவர். யோகாசனப் பயிற்சியை விருப்பப் பாடமாக பயிலும் மாணவர்கள் ஆர்வமுடன் செயற்பட்டு குருவை மிஞ்சிய சிஷ்யன் என்று பெயர் பெறுவார்கள்.

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்திசாதுரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். உங்களை நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள்.

**அஸ்தம்:** இந்த ஆண்டு திடீர் செலவு உண்டாகலாம். ஆன்மிகத்தில் ஈடுபாடு காட்டுவது உங்களுக்கு மனநிம்மதி ஏற்படுத்தித் தரும். பகீரதப் பிரயத்தனம் செய்வதன் மூலமாகவே நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிறிது முயற்சி செய்வதன் மூலம் சிறந்த வாய்ப்புகள் கைகூடும். மேலும் உங்கள் கௌரவம் அதிகரிக்கும். புதிய திட்டங்களை செயற்படுத்திக் கொள்ள சிறப்பான சந்தர்ப்பம் அமையும். சக வியாபாரிகளுடன் ஒத்துப்போவீர்கள். பெரிய கடன்களிலிருந்து விடுபடவும் வழி கிடைக்கும். உற்பத்தி சார்ந்த தொழிற்துறையாளர்களுக்கு தொய்வின்றி தொழில் நடைபெறும்.

**சித்திரை 1,2ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு வீட்டைவிட்டு வெளியே தங்க நேரிடலாம். பதவிகளில் முன்னேற்றம் உண்டாகும் காலமிது. கடின உழைப்பும், புத்திசாதுர்யமும் பதவி முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். நஷ்டம் உண்டாக வாய்ப்புகள் உண்டு. உங்கள் சமயோஜித புத்திக்கூர்மையால் திடீரென்று வரும் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. ஆனாலும் பணம் சம்பந்தமான விடயங்களில் கவனத்துடன் செயற்படுவது நன்மை தரும். எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிப்பது அவசியம். எல்லா காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும்.

**பரிகாரம்:** முடிந்த வரை புதன்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று 11 முறை வலம் வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வியாழன்.

**அதிஷ்ட எண்கள்:** 2, 3, 5

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலாவதியான பொருட்களை விற்பனை செய்ததால் தண்டம்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருட்கள், வண்டு மொய்த்த பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த இரு பூட்சிற்றிகளுக்கு 90 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் பகுதிகளில் உள்ள பூட்சிற்றிகளில் வண்டு மொய்த்த, திகதி காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் குறித்த பூட்சிற்றிகள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது, காலாவதியான பொருட்கள், வண்டு மொய்த்த பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த இரு பூட்சிற்றிகள் இனங்காணப்பட்டன.

இதனையடுத்து குறித்த பொருட்களை கைப்பற்றிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதவான், இரு பூட்சிற்றி முகாமையாளர்களையும் கடுமையாக எச்சரித்து, 60 ஆயிரம் மற்றும் 30 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (6-33)

## 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டம் தொடர்பான தீர்மானம் மீளாய்வு

(கொழும்பு)

'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற திட்டத்தின் கீழ் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலைகள் தொடர்பில் மீளாய்வு மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை தற்போது மீளாய்வு செய்து வருகின்றோம். இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பல பாடசாலைகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

எனவே அந்தப் பாடசாலைகள் அனைத்தையும் மதிப்பாய்வு செய்து எங்கள் திட்டத்தின்படி 3 கிலோமீற்றர் எல்லைக்குள் அனைத்து குழந்தைகளும் செல்லக்கூடிய ஆரம்பப் பாடசாலைகளை உருவாக்கவும், இதுபோன்று பல பாடசாலைகளை இணைத்து முழுமையான மேல்நிலைப் பாடசாலைகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

மேலும் 80% - 90% வேலைகளை முடித்த பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளிக்க எதிர்பார்த்துள்ளோம். என அவர் தெரிவித்தார். (நி)

## பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குங்கள்- செல்வம் எம்.பி



(கொழும்பு)

புலம்பெயர் மக்கள் இங்கு வந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கு பயங்கரவாத தடைச் சட்டம் தடையாக உள்ளது எனவும் இச் சட்டத்தை முற்றாக நீக்குமாறும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், முப்படையினர் ராலும் தொல்லியல் திணைக்களம் மற்றும் வன இலாகா திணைக்களத்தாலும் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இந்திய முகாம்களில் உள்ள இலங்கையர்கள் மீண்டும் நாட்டிற்கு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆனால் கடவுச் சீட்டை பெறுவதில் அவர்களுக்குத் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டிற்கு வரவழைக்க நடவடிக்கை எடுப்பதுடன் அனர்த்தங்கள் ஏற்படும் போது அரச ஊழியர்களின் குடும்பங்களையும் கவனத்தில் எடுக்குமாறும் அவர் கோரிக்கைவிடுத்தார். (நி)

**லங்கா மஹறால் (PVT) LTD**

**உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(559)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**0091956615 6719**

Western Union MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

**077 839 3974**

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் 747 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி இதுவரை 747 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், உயர் நீதிமன்றில் 14 வழக்குகளின் கீழ் 100 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் வெளிப்படுத்தப்படும் உண்மைகளின் அடிப்படையில் மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், இந்த விசாரணைகள் புதிய கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி நவம்பர் 11 ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

## பெயர்மாற்ற அறிவித்தல்

சோமசுந்தரம் வீதி ஆனைக்கோட்டையில் வசிக்கும் உதயகுமார் யசிந்தன் எனும் பெயரை 08.01.2025 இன்று முதல் யஜந்தன் என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ். சனநாயகக் குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(2953)

உண்மையுள்ள- உதயகுமார் யஜந்தன்

## இராசிபலன்

08.01. 2025
மார்கழி 24, புதன்கிழமை
நவமி பிற்பகல் 2.30 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 4.43 மணிவரை
சுபநேரம் -5.02-6.32 மணிவரை
இராகுகாலம் 12.32-2.02 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரம், அத்தம்

வளவன்

**மேஷம்** — கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**கடகம்** — உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** — மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், போசன சுகமுண்டு,

**மகரம்** — அதிஷ்ட வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான நாள்.

**ரிஷபம்** — விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுப காரியச் செலவுகள் சற்று அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்** — வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் நிறைவேறலாம், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** — சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்** — பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாடு பெருமை சேர்க்கும்.

**மிதுனம்** — எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், போசன சுகமுண்டு.

**கன்னி** — மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவு செய்ய அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு** — கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற கடும் முயற்சி தேவை.

**மீனம்** — இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

தவறானதைச் செய்து எவரும் பெருமையடைய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் நூற்றாண்டுவிழா 2ஆம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (ஜே.பி) அவர்களின் நூற்றாண்டு விழா 2 ஆம் நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமுறை வழிபாடு இடம்பெற்றதை யடுத்து தொடர்ந்து வரவேற்புரையினைத் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் வழங்கவுள்ளதுடன் ஆசியுரையினைக் கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டு நாதன் வழங்கவுள்ளார்.

வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர். பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர். பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ். பல்கலைக்கழக பட்ட மேற்படிப்புத்துறை முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் மற்றும் இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர், மூத்த எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு நூல் வெளியீடான "அன்னையின் கந்தபுராண சொற்பொழிவுகள்" வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் சிவத்தமிழ்ச்செல்வி சிறப்பு மலர் வெளியீட்டுரையை வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி சு.சிவகுமாரனும் (ஜேர்மனி) வழங்க வுள்ளனர்.

இறுதியாகத் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவிகள் மற்றும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் பழைய மாணவிகள் இணைந்து வழங்கும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6)

# கட்டாக்காலிகள் நடமாட்டம் அதிகம்

## கட்டுப்படுத்தாவிடின் கடும் நடவடிக்கை பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வீதிகளில் நடமாடித் திரியும் கட்டாக்காலிகள் தொடர்பில் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சீ.ஏ.தனபால தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள வீதிகளில் கட்டாக்காலிகளின் நடமாட்டங்கள் அதிகமாகக் காணப்படுவதால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடிய சூழ் நிலையும் காணப்படுகின்றது.

இந்நிலையில் ஒரு வாரத்திற்கு வடக்கு மாகாணம் முழுவதும் கட்டாக்காலி உரிமையாளர்களுக்கு முதற்கட்ட நடவடிக்கையாக எச்சரிக்கை வழங்கப்படவுள்ளது.

அவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டும் கருத்தில் கொள்ளாத கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (6)



கிளிநொச்சி முரசுமோட்டையில் அமைந்துள்ள நவஜீவனம் பகல் பராமரிப்பு நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறைக் கட்டடத் தொகுதி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. (படம்: யதுபாஸ்கரன்)

# ஓய்வூதியத் தொகையை வழங்கக்கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

## வடமாகாண ஓய்வூதியர் உரிமைகளை பேணிப்பாதுகாக்கும் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று வட மாகாண ஓய்வூதியர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்பினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் வட மாகாண ஓய்வூதியர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்பினால் 2016-2019 வரை ஓய்வு பெற்று 1.1.2020 இல் வழங்க வேண்டிய ஓய்வூதியத் தொகையை வழங்காமையால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில் யாழ்ப்பா ணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் 300 இற்கும் மேற்பட்ட ஓய்வூதியர்களின் கையொப்பங்களுடன் 01.1. 2025 இலிருந்தாவது 01.1.2020 இல்வழங்க வேண்டிய ஓய்வூதியத் தொகையை வழங்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

# யாழ். சுகாதார நகர திட்ட விரிவாக்க கலந்துரையாடல்

## பலதரப்பட்ட விடயங்கள் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் - சுகாதார நகர திட்டத்தின்" முன்னேற்றம் தொடர்பான கலந்தாய்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முன்தினம் காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

உலக சுகாதார நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட விடயப்பரப்புக்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களின் பாவனையை மட்டுப்படுத்துவதன் தேவைப்பாடு ஆராயப்பட்டதுடன் யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள சில வீதிகளை ஒருவழிப்பாதையாக்குவதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர் ஊடாக குழு அமைத்து இறுதித் தீர்மானம் மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார். மேலும் யாழ். நகர மத்தியில் அமைந்துள்ள பேருந்துத் தரிப்பிடத்தின் ஊடாக எழுந்துள்ள நெருக்கடிகள் தொடர்பில் பல தரப்புக்களும் சுட்டிக்காட்டினர். பேருந்துத் தரிப்பிடத்தை இடமாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது என்பதைக் குறிப்பிட்ட ஆளுநர் இது தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

திண்மக் கழிவகற்றல் முக்கிய சவாலாக இருக்கின்றமை தொடர்பில் ஆராயப்பட்டது. எரியூட்டி அமைப்பது தொடர்பில் திட்டம் முன்மொழியப்பட்டாலும் அதற்கான நிதி மூலம் மற்றும் பொருத்தமான இடத்தைக் கண்டறிவது தொடர்பில் தொடர்ந்தும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடுமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

யாழ். நகரப் பகுதியிலுள்ள பூங்காக்களை மேம்படுத்துவது மற்றும் நீச்சல் தடாகத்துக்கு பொருத்தமான இடத்தைக் கண்டறிவது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அடுத்த மாதம் மீண்டும் கலந்துரையாடல் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 1100 | 800-1000 | 1000 |
| தக்காளி | 400 | 400 | 400 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 220 | 180-200 | 200 |
| கோவா | 180 | 250 | 250 | 250 | 300 |
| கரட் | 200 | 350 | 250 | 300 | 400 |
| பூசணி | 150 | 120 | 160 | 150 | 200 |
| புடோல் | 250 | 200 | 250 | 250 | 200 |
| வாழைக்காய் | 120 | 140 | 150 | 120-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 350 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 220 | 200 | 200 |
| பாகற்காய் | 800 | 700 | 600 | 500-600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 350 | 300 | 200-250 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 350 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 500 | 400 | 600-700 | 400 |
| லீக்ஸ் | 420 | 380 | 3 | 330 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 300 | 400 | 400 |
| கறிமிளகாய் | 900 | 700 | 550 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 700 | -- | -- |
| போஞ்சி | 400 | 350 | 1000 | 350-400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 400 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 70 | 300 | 80-120 | 200 |
| தேசிக்காய் | 300 | 300 | 150 | 200-300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 400 | 100-200 | 180-230 |
| இராசவள்ளி | 500 | 800 | 170 | 700 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 700 | 650 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 200 | 600 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 200 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 150 | 90 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 80 | 250 |

100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாபெரும் உயர்கல்விக் கண்காட்சி

JAFFNA EDUCATION FAIR 2025
Your Future Begins Here...
5TH EDITION

A/LEVEL
முடித்த பிறகு அடுத்தது என்ன?



NOT DECIDED YET?
FIND OUT ALL THE OPTIONS

▸ BACHELORS ▸ DEGREE ▸ DIPLOMA
▸ CERTIFICATE ▸ HND ▸ MBA ▸ MSC

11th & 12th JANUARY 2025
9.00 am to 5.00 pm
VALAMPURI HOTEL JAFFNA
அனுமதி இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!

PLATINUM SPONSOR: A·P·I·I·T — GOLD SPONSOR: StudyGlobal, BCAS Campus, Northern Uni, New Zealand, ESOFT Metro Campus
SILVER SPONSOR: CA, SCOT Campus, Fox Resort, ICSX — OFFICIAL RADIO PARTNER — PRINT MEDIA PARTNER: வலம்புரி — SUPPORTED BY — ORGANIZED BY: EVOLUTION — DIGITAL MEDIA PARTNER: SAKSITY

விபரங்களுக்கு அழையுங்கள்
0775656633
0722600620 (இ)


# போலி வைத்தியர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை

## சுகாதார அமைச்சர் அதிரடி

(கொழும்பு)

இலங்கை மருத்துவ சபையின் கீழ் பதிவு செய்யாத வைத்தியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயார் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார. நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், "இலங்கையில் பல மருத்துவ முறைகள் நடைமுறையில் உள்ளன. அந்த மருத்துவர்கள் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

சில மருத்துவ சபைகளில் இந்தப் பதிவில் சிக்கல்கள் உள்ளன. பதிவு செய்யப்பட்ட மருத்துவ முறைகளைத் தவிர மாற்று மருத்துவ முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. சில போலி வைத்தியர்கள் இருக்கிறார்கள். இது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன.

பதிவு செய்யாத மருத்துவர்கள் இருந்தால் தெரிவிக்கவும். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயார்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)


# துறவற அர்ப்பண வாழ்வில் வெள்ளி விழா வாழ்த்து



துறவற அர்ப்பண வாழ்வில்
25 ஆண்டுகள் நிறைவு
செய்து இன்று
வெள்ளிவிழாக் காணும்
அருட்சகோதரி.
மேரி டொறின்
அவர்களின் சேவை நலன்
பாராட்டு

மன்னு புகழ் மேவும் மன்னாரில் பிறந்து
மறைகூறும் வாழ்வியல் நெறிகளிலே வளர்ந்து
இன்பமுடன் கல்விச் சேவையிலே இணைந்து
இனிய ஆசிரியையாய், உப அதிபராய் பணி செய்கின்ற
அன்பான அருட்சகோதரியாய்த் துறவறத்தினில்
அகம் மகிழ்ந்து வெள்ளிவிழாக் கொண்டாடும் வேளை
அன்னையாய் உமைக் கண்டு வாழ்த்துகின்றோம்
செந்தமிழ் போல் நீடூழி வாழ்க! வாழ்க! வாழியவே!

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள்,
(2951) யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L, Salesman<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15062 | பிறப்பு : 1998 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 14 1/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS (Final Year).<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/15023 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>12 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L,மேசன்<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15063 | பிறப்பு : 1998 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>1 இல் செவ்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில் : Unani Medical Student (3rd Year, Colombo University)<br>எதிர்பார்ப்பு : Doctor, Engineer, உயர் தொழில்<br>தொ.இ: G/15025 |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம் : ரோகினி<br>12 இல் சூரி செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, Studio<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15065 | பிறப்பு : 1991 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>7 இல் செவ்<br>கி.பா: 15<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: London.<br>எதிர்பார்ப்பு :வெளிநாடு UK மட்டும்.<br>தொ.இ: G/15030 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



# மணிவிழா வாழ்த்து



08.01.2025
திருமதி.லலிதாமலர்
முகுந்தன்
BBA (Hons), PGDE,
M.Phil (education),
Dip in School management
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்),
வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.

நேர்கொண்ட பார்வை யார்க்கும் அஞ்சா
திடம் கொண்ட மனவுறுதி
சீர்கொண்ட அதிபர் பணியை
சமூகம் ஏற்றிட திலகமிட்டவரே
தார் கொண்ட மகாலட்சுமி கடாச்சம்
கொண்டவரே ஏற்றம் உங்களுக்கே
பார் கொண்ட மக்கள்
யாவரும் இனிய பயன்பெற
உங்கள் பணி ஆனதோ
வாழ்க! வாழ்க! வாழிய உங்கள் புகழ்
வாழிய! பல்லாண்டு! வாழிய பல்லாண்டு.

Best Wishes!

வாழ்த்துவோர் :
பாடசாலைச்சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி,
மீசாலை.
(f-1970)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தகுதி நீக்கம் செய்யப்பட்ட

# தென்கொரிய ஜனாதிபதிக்கு பெருகும் ஆதரவு



(சியோல்)

தென் கொரியாவில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு ஆதரவாகப் பொதுமக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்கொரியாவின் ஜனாதிபதியாக இருந்த யூன் சுக் இயோல் கடந்த ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி, நாட்டுமக்களிடம் உரையாற்றியபோது, அவசரநிலை இராணுவச் சட்டத்தை அமுல்படுத்துவதாக அறிவித்தார். இதற்கு எதிர்ப்பு எழுந்தது. தொடர்ந்து அவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் பதவிநீக்க தீர்மானத்தைக் கொண்டு வந்தன.

டிசம்பர் 14 ஆம் திகதி இதற்கான வாக்குப்பதிவு தோல்வியில் முடிந்தாலும், 27 ஆம் திகதி நடைபெற்ற வாக்குப்பதிவில் அவருக்கு எதிராக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து, அவசர நிலை இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தியதற்காக முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோல் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது.

இதுதொடர்பான வழக்கு சியோல் நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில் கடந்த வாரம் யூன் சுக் இயோலை கைதுசெய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டில் அவர் மீதான நீதிமன்ற நடவடிக்கைக்கு பலரும் வரவேற்பு தெரிவித்தனர்.

இதற்கிடையே அந்நாட்டு பொலிஸார் மற்றும் வழக்கறிஞர்களை உள்ளடக்கிய கூட்டுப் புலனாய்வுக் குழுவின் அதிகாரிகள் யூன் சுக் இயோலை கைதுசெய்ய, கடந்த ஜனவரி 3 ஆம் திகதி காலை அவரது இல்லத்திற்குச் சென்றனர்.

ஆனால் அவரது ஆதரவாளர்கள் வீட்டிற்கு முன் குவிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அவரைக் கைதுசெய்யவிடாமல் தடுத்தனர். இதையடுத்து அங்கு காவல் துறையினர் குவிக்கப்பட்டனர். இதனால் இரு தரப்புக்கும் மோதல் நிலவியது. தவிர அங்கு மேலும் பதற்றம் நிலவியதைத் தொடர்ந்து இயோல் கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் தென் கொரியாவில் தகுதிநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு ஆதரவாகப் பொதுமக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தலைநகர் சியோலில், ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியில், தேசியக் கொடிகளை கையில் ஏந்தியபடி, ஜனாதிபதிக்கு ஆதரவாக முழக்கங்களை எழுப்பினர். ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் செல்வதைத் தடுக்கும் வகையில், காவல் துறையினர் அதிக அளவில் குவிக்கப்பட்டிருந்தனர். தடுப்புகள் போடப்பட்டு, காவல் துறையினர் தீவிரக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

இது ஒருபுறமிருக்க மறுபுறம் அந்நாட்டுக்கு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளின்கன், சியோலுக்கு வருகை தந்துள்ளார். தென் கொரியாவின் தற்காலிக ஜனாதிபதியாகப் பதவி வகித்து வரும் சோய் சாங் மாக்கைச் சந்தித்து, பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆன்டனி பிளின்கன் ஆலோசனை மேற் கொண்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, தென் கொரிய ஜனநாயகம் மீதும், தற்காலிக ஜனாதிபதி சோய் சாங் மாக் மீதும் பிளின்கன் நம்பிக்கை தெரிவித்ததாக, தென் கொரிய நிதி அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதோடு வடகொரியாவின் அச்சுறுத்தலுக்கு மத்தியில், தென் கொரியாவுக்கு முழுப் பாதுகாப்பு வழங்குவதில் அமெரிக்கா உறுதியாக இருப்பதாகப் பிளின்கன் தெரிவித்ததோடு, கூட்டு இராணுவப் பயிற்சிகளில் ஈடுபடுவது குறித்தும் ஆலோசித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின் போது, வடகொரியா ஏவுகணையை வீசி சோதனை செய்தது குறிப்பிடத்தக்கது. (நி)

# திபெத்

- 95 பேர் உயி
- 130 பேர் படு
- உயிரிழப்பு

(காத்மண்டு) —

நேபாள திபெத்
யுள்ள கடும் பூக
உயிரிழந்துள்ள
தகவல்கள் வெளி



## சீன வைரஸ் அச்சம்!

# முகக்கவசம் அணியுமாறு இந்தியாவில் அறிவுறுத்து



(டில்லி)

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் தற்போது சீனாவில் புதிய வைரஸ் ஒன்று பரவி வருகிறது.

எச்.எம்.பி.வி.என அழைக்கப்படும் இந்த வைரஸால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைப் போன்றே இந்த வைரஸால் காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி உள்ளிட்ட பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இந்நிலையில் இந்தியாவில் முதல் மனித மெட்டா நியூமோ வைரஸ் (HMPV) வைரஸ் தொற்று பாதிப்பு கர்நாடகாவில் கண்டறியப்பட்டுள்ளது. இந் நிலையில், கர்நாடகாவில் கூட்டமான இடங்களுக்கு செல்லும் மக்களை முகக்கவசம் அணியுமாறு அம் மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது. (நி)

# மீண்டும் ஏவுகணை சோதனையில் வடகொரியா



(பியாங்யாங்)

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை மீறி வட கொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனையை மேற் கொண்டுள்ளது.

வட கொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே நீடித்து வரும் எல்லைப் பிரச்சினையில் வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது. உலக நாடுகளின் எதிர்ப்பை மீறியும் வடகொரியா இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் அந்நாட்டுக்கு பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இருந்த போதிலும் அதிலிருந்து பின்வாங்காமல் தொடர்ந்து ஏவுகணை சோதனையில் ஈடுபட்டு வருகிறது. வடகொரியா இந்த அளவிற்கு ஏவுகணைச் சோதனைகளில் ஈடுபடுவதற்கு மிக முக்கியமான காரணமே, தென்கொரிய நாடானது அமெரிக்காவுடன் இணைந்து போர்ப்பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதுதான்.

இந்த நிலையில், புத்தாண்டு பிறந்து சில தினங்களிலேயே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ...த்தை உலுக்கிய பூகம்பம்!

## ... உயிரிழப்பு
## ...ர் படுகாயம்
## ...ழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அச்சம்



(...டு)

**...திபெத் எல்லையில் உள்ள பகுதிகளை உலுக்கி ...ம் பூகம்பத்தினால் 95 இற்கும் அதிகமானவர்கள் ...துள்ளதுடன் 130 பேர் காமடைந்துள்ளதாகத் ... வெளியாகியுள்ளன.**



இந்தப் பயங்கர நிலநடுக்கம் ரிக்டரில் 7.1 ஆக பதிவாகி இருந்தது. இந்தத் தகவலை அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

நேபாளம் திபெத் எல்லையில் மையம்கொண்டிருந்த இந்தப் பூகம்பத்தினால் பல கட்டடங்கள் முற்றாகத் தரைமட்டமாகியுள்ளதாகவும் 95 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் நேபாள, சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

திபெத்தின் இரண்டாவது மிகப்பெரிய நகரான சிகட்சேயில் பெருமளவு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என சீன அமெரிக்க கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால் மக்கள் கடும் பீதி அடைந்தனர். வீடுகளை விட்டு வெளியேறித் தெருக்களில் தஞ்சம் புகுந்தனர். நூற்றுக்கணக்கான வீடுகளில் தூங்கிக் கொண்டு இருந்ததால் அவர்கள் நிலநடுக்க பாதிப்புக்குள்ளானார்கள்.

திபெத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் இந்தியாவின் வட மாநிலங்களில் உணரப்பட்டது. பீகார், டில்லி, அசாம், மேற்கு வங்காளம் உட்பட இந்தியாவின் பல பகுதிகளில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

பீகாரின் முசாபர்பூர், மோதிஹாரி, பெட்டியா, முங்கர், அராரியா, சீதாமர்ஹி, கோபால் கஞ்ச், வைஷாலி, நவாடா மற்றும் நாளந்தா உள்ளிட்ட பல பகுதிகளில், சுமார் 30 விநாடிகள் நிலநடுக்கம் உணரப்பட்டது. (நி)

---

...ா
...ா

...கிய
...ரிய
...டன்
...ரில்
...ன்டு
...யே

வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டிருப்பது உலகில் பரபரப்பைக் கூட்டியுள்ளது. வடகொரியா செலுத்திய அந்த ஏவுகணை, ஜப்பான் கடற்கரைப் பகுதிக்கு அருகே சென்று விழுந்ததாக அந்நாட்டு இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனினும், எந்தப் பகுதியில் இருந்து இந்தச் சோதனை நடத்தப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. கடந்த இரண்டு மாதங்களாக ஏவுகணைச் சோதனை நடத்தப்படாமல் இருந்த நிலையில், தற்போது மீண்டும் சோதனை நடத்தப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தென்கொரியாவுக்கு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளின்கன் வருகை தந்துள்ள நிலையில், வடகொரியா தற்போது ஏவுகணைச் சோதனையை நடத்தி உள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

---

## பனிப் புயலில் சிக்கி அமெரிக்காவில் 5 பேர் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவைத் தாக்கிய பெரும் குளிர்கால புயலால் குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

பனிப் புயலானது நாட்டின் வெகுஜன பாடசாலைகள் மூடல், பயணக் குழப்பம் மற்றும் மின் வெட்டுக்கும் வழி வகுத்தது.

அதேநேரம் மேரிலாந்து, வர்ஜீனியா, மேற்கு வர்ஜீனியா, கன்சாஸ், மிசோரி, கென்டக்கி மற்றும் ஆர்கன்சாஸ் ஆகிய ஏழு அமெரிக்க மாநிலங்களில் அவசர நிலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தீவிர வானிலை காரணமாக 2,300 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டதுடன், 9,000 விமானங்கள் தாமதமாகியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

---

## பிரிக்ஸ் அமைப்பில் இணைந்த இந்தோனேசியா

(இந்தோனேசியா)

பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினராக இந்தோனேசியா இணைந்துள்ளதாக பிரேசில் அறிவித்துள்ளது

2025 ஆம் ஆண்டு பிரிக்ஸ் அமைப்பின் தலைமையை ஏற்றுள்ள பிரேசில், இந்தோனேசியாவை அமைப்பில் இணைப்பது தொடர்பான முயற்சிகள் கடந்த 2023 ஆம் ஆண்டு ஆரம்பமாகியதாகத் தெரிவித்தது.

மேலும் 2009 ஆம் ஆண்டு பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் பிரிக்ஸ் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதற்கு அடுத்த ஆண்டு பிரிக்ஸ் அமைப்பில் தென் ஆபிரிக்கா இணைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு.பிரிக்ஸ் அமைப்பில் ஈரான், எகிப்து. எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் முழு உறுப்பினர்களாக இணைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நிய பீடைகளும் ஆபிரிக்க நத்தைகளும்- திடீர்ப் பெருக்கம் பாதிப்பை ஏற்படுத்தும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது தேசம் அந்நிய ஆதிக்கத்துக்குள் உள்வாங்கப்படுவது என்றுமே புதிதல்ல. இது ஆட்சிபற்றிய கதையல்ல மாறாக அந்நிய தேசத்து களைகள் பூச்சி பீடைகள் இன்னும் நோய்கள் என வேற்று தேசத்திலிருந்து எமது தேசத்தினுள் ஏதேனும் ஒரு வழிமுறையூடாக வந்து சேர்ந்த பின்னர் எமது பயிர்ச் செய்கையில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுகின்றன. அந்நிய தேசத்திலிருந்து வருகை தரும் இம்மாதிரியான உயிரினங்கள் உயிரிகள் மற்றும் நுண்ணங்கிகள் இங்குள்ள சாதகமான சூழலை தமக்கு மிகவும் சாதகமானதாக ஆக்கிக் கொள்வதுடன் பல்கிப்பெருகவும் செய்கின்றன.

வந்தேறும் இவ்வாறான பீடைளுக்கான எதிர்ப்பு நிலைமை இங்கில்லாதபோது அவற்றினை இயற்கையாகவே கட்டுப்படுத்தும் பொறிமுறையும் வலுவிழந்து போய்விடுகின்றது. இந்த நிலைமை அவ்வப்போது எமது தேசத்தில் நடைபெறுவது வழமையாகிவிட்டதற்கு மிகமுக்கிய காரணமாக எமது பாதுகாப்பு பொறிமுறையிலுள்ள பின்னடைவு என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. இது வளர்ந்த நாடுகளில் நடந்தால் அங்குள்ள பாதுகாப்பு பொறிமுறை முளையிலேயே கிள்ளியெறியும் கட்டமைப்பினூடாக தடுக்கப்பட்டு விடுவது தான் இதற்கு காரணமாகும்.

இந்த வகையில் 2019 ஆம் ஆண்டில் வந்து சேர்ந்த கொவிட் வைரஸும் இங்குள்ள மனிதர்களில் பலரின் உயிரை காவுகொண்டதும் இன்னமும் அதன் தாக்கம் இருப்பதனை உணரத்தலைப்பட்டவர்களும் இருக்கின்றனர். கொவிட் 19 இனது தொற்றினைத் தடுப்பதற்காக பயன்படுத்தப்பட்ட தடுப்பூசிகளினால் பலருக்கு பின்நாளில் புற்றுநோய் தொடங்கி பல பின்விளைவுகள் ஏற்பட்டுள்ளமையும் அறிய முடிகின்றது.

இந்த கதை முடியமுன்பு சீனாவில் இப்போது புதுவகை வைரஸின் தொற்று ஆரம்பித்து பல மாகாணங்களில் மக்களிடையே பரவிவருவதாக அறியக்கிடக்கின்றது. மீண்டும் முகமூடியுகத்திற்கு இட்டுச்செல்லும் இம்மாதிரியான தொற்றுக்களால் மக்களின் வாழ்வியலில் பாரிய தாக்கங்கள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாமல் மருத்துவ உலகம் திகைத்து நிற்கின்றமையையும் காணலாம். விலங்குகளில் காணப்படும் அரியவகை வைரஸ்கள் மனிதர்களில் தொற்று ஏற்படும் போது இன்னும் வீரியமாக பரவுவதனை அவதானிக்க முடிகின்றது.

பரவுவது மட்டுமல்லாமல் பலரின் உயிர்களை காவுகொள்ளும் வீரியமான காரணியாக காணப்படுவதுடன் அநேகமாக உடலில் எதிர்ப்புச் சக்தி குறைந்த அல்லது அதில் பாதிக்கப்பட்டவர்களை இலகுவில் தாக்கி அவர்களின் இறப்புக்கும் காரணமாகி விடுகின்றது.

உள்வரும் அந்நிய பீடைகளுக்கு இங்குள்ள சுவாத்திய நிலைமை அனுகூலமாகிவிடும் போது அவற்றின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாது திணறவேண்டியிருக்கின்றது. அந்த வகையில் தாவர களைகளான பாதீனியம், நாயுண்ணி, ஆகாயத் தாமரை தொடங்கி பூச்சிபீடைகளான முருங்கை முடிச்சு குளவி, மாவுப்பூச்சி, சோளத்து இராணுவ புழு (Fall army worm), சிற்றுண்ணிகளில் தென்னை சிற்றுண்ணி (Coconut mite) மற்றும் தாவரநோய்களான வாழையில் குருத்தடைப்பு, மற்றும் பலவகையான நோய்கள் எமது தேசத்திற்கு அந்நியதேசத்திலிருந்து வந்து பல்கிப்பெருகி பலவகையில் சேதங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



இன்றும் அவற்றிலான சேதம் இன்னமும் இருந்துகொண்டேயிருக்கின்றது. இவ்வாறாக வந்து சேரும் அந்நிய உயிரினங்கள் இங்குள்ள காலநிலைக்கு மண்வளத்திற்கு சுவாத்தியத்திற்கு அனுசரித்துப் போகும் நிலையிலிருப்பதனால் அவற்றை கட்டுப்படுத்துவது மிக மிக கடினமானதாக இருக்கின்றது.

இவ்வாறாக எமது தேசத்திற்குள் வந்து சேரும் இவ்வாறான அந்நிய உயிரினங்களினாலான சேதங்கள் மிகவும் அதிகமாக காணப்படுவதனாலும் அவற்றுக்கான இயற்கையான எதிரிகளான ஒட்டுண்ணிகள், இரைகௌவிகள் மற்றும் நோயாக்கிகள் என்பன எமது சூழல் தொகுதியில் இல்லாதிருப்பதும் இருந்தாலும் வீரியம் குறைந்தனவாகவும் காணப்படுவதனால் இவ்வகையான வந்தேறு பீடைகள் பல்கிப்பெருகி விடுகின்றன. இன்னும் இவ்வாறான நத்தைகள் பற்றியஅறிவு மக்களிடம் குறிப்பாக விவசாயப் பெருமக்களிடம் செல்ல வேண்டும்.

எமது பயிர்ச்செய்கையில் கால் நடைகளில் சேதத்தை ஏற்படுத்தும் வந்தேறிகளிலிருந்து அவற்றைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் அவை பற்றிய அனைத்து தகவல்களும் இல்லாதுவிட்டால் விரைந்து ஆய்வுக்குட்படுத்தி அவற்றை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் அவசியம் முனைப்புப் பெற வேண்டும். பிறதேசங்களில் பயன்படுத்தப்படும் கட்டுப்பாட்டு முறைகளை ஆய்வுக்குட்படுத்தி அதிலிருந்து எமது பிரதேசத்தில் பயன்படுத்தக் கூடிய கட்டுப்பாட்டு முறைமைகளையும் மக்கள் துணிந்து பயன்படுத்தும் முறைகளையும் அவசியம் கண்டாக வேண்டும்.

கடந்த மாதம் பெய்த அடைமழைக்குப் பின்னர் இவ்வாறான உருவத்தில் பெரிய ஆபிரிக்க நத்தைகள் (Giant African Snail - Lissachatina fulica) பெருகி வலம்வரத்தொடங்கிவிட்டன. இந்த பெரிய நத்தைகள் 1900 ஆண்டுகளில் கிழக்கு ஆபிரிக்க கரையோரங்களில் இருந்து எமது நாட்டுக்கு வந்தேறு குடியாகிவிட்டன. இவற்றினது பெருக்கம் பெரிதாக இதுவரையில் உணரப்படாதிருந்தும் தற்போது திடீரென பல்கிப் பெருகுவதாக அறியப்பட்டுள்ளது.

இந்த நத்தைகளின் நகரும் வேகம் மிகவும் குறைவானது என்றாலும் தினமும் நகர்ந்து சென்று தமது இலக்கினை அடைந்து விடுகின்றன. இவ்வாறான நத்தைகள் முன்பே இனங்காணப்பட்ட போதிலும் இவை ஆபிரிக்க தேசத்திலிருந்து எமது நாட்டுக்குள் வந்தேறிய குடிகளாகும். தாவரங்களை உணவாகக் கொள்ளும் இவ்வாறான நத்தைகள் பெரியளவில் இருப்பதனால் இவற்றினது உணவுண்ணும் அளவு அதிகமாகவே காணப்படுகின்றது. இதைவிட இவ்வாறான நத்தைகள் மனிதருக்கு மூளைமென்சவ்வு அழற்சியை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிக் புழுக்களான நோய்க்கிருமியை காவிச் செல்கின்றன என்பதனை அறிய முடிகின்றது.

அளவில் பெரிதாக காணப்படும் இவ்வாறான நத்தைகளின் அளவு 20செ.மீ நீளமும் 10 செ.மீ அகலமுமாக காணப்படுகின்றன. இந்த அளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. செம்மண்ணிற அல்லது மண்ணிற நிறமான நத்தையின் ஓட்டில் கறுப்புநிறமான ஓரளவுக்கு அகன்ற நீள்பக்க வரிகள் ஓட்டின் அரைப்பகுதிவரை நீண்டு காணப்படுகின்றன. ஏழு தொடக்கம் ஒன்பது வரையான சுழிகள் உள்ள நத்தையின் ஓடு பாதுகாப்பான கவசமாக இருப்பதனால் இவை தம்மை எதிரிகளிலிருந்து இலகுவில் பாதுகாத்துக் கொள்கின்றன. ஒரு நத்தையின் நிறை சராசரி 32 கிராமாக காணப்படுகின்றது.

ஆபிரிக்க நத்தைகளில் ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புக்கள் இரண்டுமே காணப்படுகின்றன. இவ்வாறான நிலைமையை மண்புழுக்களிலும் அவதானிக்கலாம். அதனை ஈரிலிங்க உயிரினங்களாக (Hermaphrodite) காணப்படுகின்றன. இரண்டு நத்தைகள் இனக்கலப்பில் ஈடுபட்டால் இரண்டுமே தமது பெண் இனப்பெருக்க அமைப்புக்கள் மூலமாக முட்டைகளை உருவாக்கி இனம் பெருக்கும் வல்லமையுள்ளவை. ஏறக்குறைய 5 தொடக்கம் 6 ஆண்டுகள் வரை வாழும் வல்லமையுள்ள நத்தை தனது ஆயுட்காலத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான முட்டைகளை இடுகின்றது.

பகலில் இவற்றினது அசைவு பெரிதாக உணரப்படுவதில்லை ஆயினும் இரவில் இவை அசைந்து தாவரங்களை உணவாக்கிக்கொள்கின்றன. எமது வீடுகளில் வளர்க்கப்படும் அழகுத் தாவரங்களில் வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களில் இன்னும் ஏனைய தாவரங்களையும் உணவாக்கும் இந் நத்தைகள் எமது தேசத்து உயிர்ப்பல்வகைமைக்கு அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றன. இதனை சுற்றுச்சூழல் அமைச்சின் உயிர்ப்பல்வகைமை திணைக்களத்தின் தகவல்கள் உறுதிசெய்கின்றன.

இவற்றை கட்டுப்படுத்தவதற்கான தகவல்கள் மிகக்கணிசமானதாகவே காணப்படுகின்றன இருப்பினும் மெற்றல்டிகைட், மெரையோகாப் மற்றும் இரண்டையும் கலந்த நத்தைநாசினிகளை எண்ணிக்கை அளவுக்கதிகமாக காணப்பட்டால் விசிறலாம். நத்தையின் கோது நத்தை நாசினிகளை உட்செறிய விடாது என்பதனையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். கைகளால் இவற்றை பிடித்தழிப்பதானால் கையுறைகளை அவசியம் அணிதல் நல்லது. தொற்றுநோய்க் கிருமிகளை காவுவதால் வெற்று கைகளால் இவற்றை பிடிப்பதனை தவிர்ப்பது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப்படுத்தலில் நெருக்கடிக்குள்ளாகும் கொடித்தோடை உற்பத்தியாளர்கள்



(கண்டாவளை)

கொடித்தோடை உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பழங்களை விற்பனை செய்வதிலும் சந்தைப்படுத்துவதிலும் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் நிலக்கடலை செய்கை மற்றும் மிளகாய் செய்கை என்பவற்றுடன் கொடித்தோடை செய்கை என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன.

இத்திட்டத்தில் ஒன்றான கொடித்தோடை உற்பத்தி திட்டத்தின் கீழ் 200 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்ட போதும் குறிப்பிட்ட சில விவசாயிகள் மாத்திரமே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் ஒரு அங்கமான கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் சுமார் 85. 11 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கொடித்தோடை கொள்வனவு மற்றும் பதப்படுத்தல் நிலையத்தினால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழத்தினை ஒரு கிலோ 650 முதல் 700 ரூபாய்க்கு கொள்வனவு செய்வதாகக் குறிப்பிட்ட போதும் தற்போது 150 ரூபாய்க்கும் குறைவான விலைகளிலேயே குறித்த ஒரு கிலோ பழத்தினை கொள்ளளவு செய்வதாகவும் தெரிவித்துள்ளனர். (6-315)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வருடாந்தப் பொதுக் கூட்டறிக்கை, செயற்பாட்டறிக்கை, வருடாந்தக் கணக்கறிக்கை, புதிய செயற்குழு தெரிவு, பிற விடயங்கள் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

ஆகவே உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (6)

# கடந்த வருடம் வவுனியாவில் டெங்கினால் 113 பேர் பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு 113 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மழைக் காலங்களில் மழை நீரானது டெங்கு நுளம்பு பெருகும் வகையில் தேங்கி நிற்காமல் இருப்பதற்காக சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

எனினும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 113 பேர் வவுனியாவில் டெங்கு நோயினால் பாதிப்படைந்தனர். அதில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 82 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் குணமடைந்து தற்போது வீடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. (6-250)

# இயந்திரம் பழுது மின் விநியோகம் நெருக்கடி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச மின்சார விநியோகத்தில் இணைக்கப்பட்டுள்ள பாரிய மின் இயந்திரம் பழுதடைந்தமையால் நெடுந்தீவுக்கான மின்விநியோகம் சீராக வழங்கமுடியாதுள்ளதாக மின்சாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் தினமும் அதிகாலை 1 மணி முதல் 3 மணிவரையும், காலை 8 மணிமுதல் 10 மணிவரையும் மாலை 2.30 மணிமுதல் 5.30 மணி வரையும் மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இயந்திரத்தில் திருத்தம் மேற்கொள்ளும் வரை இவ் மின் வெட்டு நடைமுறையில் இருக்கும் என்பதுடன் நேர மாற்றம் தொடர்பில் தகவல் வழங்கப்படும் எனவும் மின இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (6)

# இலங்கைக்கு வர விருப்பம் 13 குடும்பங்கள் மனு கையளிப்பு



(மன்னார்)

இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து கடல் வழியாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் என இலங்கை அகதிகள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மனு கையளித்துள்ளனர்.

இதுவரை 309 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடியில் கடல் வழியாக அகதிகளாக தஞ்சமடைந்து மண்டபம் ஈழத்தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தஞ்சமடைந்த இலங்கை தமிழர்களை அகதிகளாக இந்திய அரசு இதுவரை பதிவு செய்யாத காரணத்தினால் இவர்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படும் எந்த விதமான நிவாரணமும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வருவாய் இன்றி தவித்த இலங்கை தமிழர்கள் ஐந்து குடும்பத்தினர் மீண்டும் சட்ட விரோதமாக கடல் வழியாக அண்மையில் இலங்கைக்கு திரும்பிச் சென்றுள்ளதாகத் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அகதிகளாக பதிவு செய்யாமல் உள்ள இலங்கை தமிழர்கள் 13 குடும்பத்தினரை படகு மூலம் அல்லது விமானம் மூலம் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறு நேற்று முன்தினம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து பாதிக்கப்பட்ட இலங்கை அகதிகள் மனு கையளித்துள்ளனர். (6-285)

# அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் கால்நடைகளை கடத்திய நபர் கைது

(தருமபுரம்)

அனுமதிப்பத்திரம் இன்றி கால்நடைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸார் வீதிச் சோதனையினை முன்னெடுத்தவேளை கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கான வீதி அனுமதிப்பத்திரம், வைத்தியர், பிரதேச சபை, சுகாதார பரிசோதகர் ஆகியோரிடம் உரிய அனுமதிபெறாமை மற்றும் கால்நடைகளுக்கான நீர், உணவு, காற்றோட்ட வசதி போன்ற வசதியின்மை போன்ற குற்றத்தின் அடிப்படையில் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை கால்நடைகள் மற்றும் வாகனம் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

சம்பவத்துடன் தொடர்புடைய நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (6-316)

# சேதமடைந்த இறங்குதுறையை புனரமைத்து தாருங்கள்

## கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி- பூநகரி பிரதேசத்தில் உள்ள நாகதேவன் துறை இறங்குதுறையானது மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதுடன் கடற்றொழிலுக்கு சென்று வருவதிலும் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்றொழில் கிராமங்களில் ஒன்றான பூநகரி நாகதேவன் துறையிலுள்ள இறங்குதுறையானது கடந்த 1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக முற்றுமுழுதாக சேதமடைந்து இன்றுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் குறித்த பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் நாளாந்தம் இவ்வாறு பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக கடற்கரைக்கு செல்லும் குறித்த பாதையானது மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதுடன் துவிச்சக்கர வண்டிகளில் அல்லது வேறு எந்த வாகனங்களிலோ செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன் கடற்கரையில் உபகரணங்களைப் பாதுகாப்பதிலும் பெரும் இடர்களை எதிர் கொள்வதாகத் தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுத்து குறித்த இறங்குதுறையினைப் புனரமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (6-315)

# 95 மில்லிக்கிராம் ஐஸ்போதையினை உடமையில் வைத்திருந்தவர் கைது



(தருமபுரம்)

95 மில்லிக்கிராம் ஐஸ் போதையினை உடமையில் வைத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை வீதிச் சோதனையில் ஈடுபட்டு இருந்த தருமபுர பொலிஸார் சோதனையிட்ட வேளை ஐஸ்போதை பொருள் இவ்வாறு மீட்கப்பட்டது.

இதன்போது 12 ஆயிரத்து 800 ரூபாய் பணமும் மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந் நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 677





இதை நீர் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளும். "ஒரு சிறு குழந்தையை எந்தக் காட்டிலிருந்தோ பிடித்துக் கொண்டு வந்து தங்களை ஏமாற்றுகிறார்கள்." குழந்தை எதற்காக என்று உமக்குத் தெரியுமா?

"பாண்டியன் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்துப் பட்டம் கட்டுவதற்காக-" என்றான். "மறுபடியும் தவறாகச் சொல்கிறீர். பாண்டியன் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க மட்டும் அல்ல துங்கபத்திரையிலிருந்து இலங்கை வரையில் பரந்து கிடக்கும் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் அமர்த்தி முடி சூட்டுவதற்காக!"

"அம்மம்மா! யாருடைய உதவியைக் கொண்டு இந்த மகத்தான காரியத்தைச் சாதிக்கப் போகிறீர்கள்? இதோ சுற்றிலும் நிற்கிறார்களே இந்த நரிக்கூட்டத்தின் உதவியைக் கொண்டா? சோழ சாம்ராஜ்யத்தின் இருபது லட்சம் வீராதி வீரர்கள் கொண்ட மாபெருஞ் சேனையை பகலில் வளைகளில் ஒளிந்திருந்து இரவு நேரத்தில் வெளிப்பட்டு வரும் இந்தப் பத்து இருபது நரிகளின் துணை கொண்டு வென்று விடுவீர்களா?

நான் இவர்களை மட்டும் நம்பியிருக்கவில்லை. இதோ என் கையில் உள்ள வாளை நம்பியிருக்கிறேன். இதன் உதவியினால் என் மனத்தில் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவேன்.

அம்மணி! அந்த வாளைத் தாங்கள் ஒருநாளும் உபயோகப்படுத்தப்போவதில்லை. அதற்கு வேண்டியபலம் தங்கள் கையிலும் இல்லை. தங்கள் நெஞ்சிலும் இல்லை! ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? ஏதோ என் மனத்தில் தோன்றியதைக் கூறினேன்.

"நீர் சொல்வது முற்றும் தவறு என்று இந்த இடத்திலேயே என்னால் நிரூபித்துக் காட்ட முடியும்!"

"அப்படியானால் நான் பாக்கியசாலிதான். தங்கள் திருக்கரத்தினால் வெட்டுப் பட்டுச் சாவதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா?" என்று கூறி வந்தியத்தேவன் வெட்டுப்படுவதற்கு ஆயத்தமாவது போல் கழுத்தை வளைத்துத் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"என் திருக்கரத்தினால் வெட்டுப் படுவதற்குத்தானா ஆசைப்படுகிறீர்? கிரீடம் சூட்டப்படுவதற்கு விரும்பவில்லையா?" என்றாள் நந்தினி.

வந்தியத்தேவன் நிமிர்ந்து பார்த்து, "தாங்கள் வசமுள்ள கிரீடத்தை எத்தனை பேருக்குத்தான் சூட்டுவீர்கள்?" என்று வினவினான்.

"அது என்னுடைய இஷ்டம். முடிவாக யாருக்குச் சூட்ட வேண்டுமென்று பிரியப்படுகிறேனோ அவருடைய சிரசில் சூட்டுவேன்."

"அப்படியானால் இந்தச் சிறுபிள்ளையின் கதி என்ன ஆவது? அவனுக்கு முடி சூட்டுவதும், சூட்டாததும் என் இஷ்டந்தானே?"

"தேவி, தங்களுக்கு யாருக்கு இஷ்டமோ அவருக்கு முடிசூட்டுங்கள். எனக்கு வேண்டியதில்லை." ஏன்?

"என்னுடைய சிரசிலுள்ள சுருட்டை மயிரின் அழகைப் பற்றிப் பலரும் சொல்லியிருக்கிறார்கள். கிரீடம் வைத்துக் கொண்டு அந்த அழகைக் கெடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை."

"உமது வேடிக்கைப் பேச்சை நீர் விடமாட்டீர். நல்லது ஐயா! பொன்னியின் செல்வன் கடலில் விழுந்து இறந்த செய்தியைக் கேட்டதும் இளையபிராட்டி என்ன செய்தாள்? ரொம்ப துக்கப்பட்டாளா?" என்று நந்தினி திடீரென்று பேச்சை மாற்றிக் கேட்டாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முரடனும் மணியனும்



முரடன் ஒருவன் இருந்தான். அவன் தன் அரட்டல் உருட்டல்களாலேயே நாள் பிழைத்து வந்தான். வலியற்றவர்களை மிரட்டிப் பொருள் பறித்துத் தன் வாழ்வை நடத்தி வந்தான்.

அந்த ஊரில் மணியன் என்ற ஒருவன் இருந்தான். அவன் உழைத்துப் பிழைக்கும் ஓர் ஏழை. உடலில் வலுவும் உள்ளத்தில் உறுதியும் இல்லாத ஒரு கோழை.

அவனுக்கு இந்த முரடனைப் பார்த்தாலே பயம். கண்டவுடன் உடல் நடுங்கும். முரடன் உறுமலைக் கேட்டவுடனே கையில் உள்ள காசைக் கொடுத்து விடுவான்.

அவசரமாகச் சில்லறை தேவைப்பட்டால் முரடன் மணியனைத் தான் தேடிவருவான், கேட்கும்முன் கொடுக்கக் கூடிய ஒருவன் இருக்கும்போது அவனை விட்டு வைப்பானா அவன்?

முரடன் பிழைப்பு இப்படிப் பல நாள் நடந்து வந்தது.

ஒரு நாள் முரடனுக்குக் காசு தேவைப்பட்டது. மணியனைத் தேடி வந்தான்.

மணியன் தன் குடிசைக்குள் இருந் தான். "மணியா ! மணியா!" என்று கூப்பிட்டான் முரடன். மணியன் மகன் சிறு பையன். அவன் வெளியில் வந்து "அப்பா வேலையாக இருக்கிறார். நீங்கள் திரும்பிப்போகலாம்" என்றான்.

முரடனுக்குக் கோபம் வந்தது. சீற்றத்துடன் குடிசையினுள் நுழைந்தான்.

"வேலையற்றவனே, வெளியே போ! வீணாக என்னைத் தொந்தரவு செய்யாதே!" என்று உரத்த குரலில் கூறினான் மணியன்.

முரடன் அயர்ந்து நின்று விட்டான்.

"போகிறாயா இல்லையா?" என்று மீண்டும் மணியன் முழங்கினான்.

அவன் முழக்கத்தில் வெளிப்பட்ட உறுதி முரடனைக் கலங்க வைத்தது. எதிர்பாராத அதிர்ச்சியடைந்தான். பேசாமல் திரும்பி விட்டான்.

மணியன் நிமிர்ந்து பேசக் காரணம் என்ன என்று ஆராய்ந்தான் முரடன்.

அந்த ஊருக்குப் புதிதாகக் குடி வந்த குத்துச் சண்டை வீரன், மணியன் குடிசையை அடுத்த குடிசையில் தான் குடியிருந்தான். மணியனுக்கு நண்பனாகி விட்டான்.

அவன் அவன் ஆதரவு தனக்கு இருக்கிறதென்ற உறுதியில் தான் மணியன் துணிந்து பேசினான். இனி மணியனிடம் தன் மிரட்டல் பலிக்காது என்று தெரிந்து கொண்டான் முரடன்.

கருத்துரை:- வலிமையுள்ளவர்களின் துணையைப் பெற்றால் வலிமையற்றவர்களுக்குத் துணிச்சல் வந்துவிடும். அவர்கள் பிறருக்கு அஞ்ச வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடாமுயற்சி என்ற ஒற்றை நூல் சரியாக இருந்தால் வெற்றி எனும் பட்டம் நம் வசமே.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் தமிழ்த் தேசத்தை காப்பாற்ற முன்வாருங்கள்

அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மூன்று ஆசனங்களைப் பெற்றிருப்பது சாதாரணமான விடயமல்ல.

காலாகாலமாகத் தமிழ் என்ற உணர்வோடு வாழ்ந்த எம் மக்கள் சிங்களக் கட்சி ஒன்றுக்குத் தங்களின் வாக்குகளை வழங்கினர் எனில், அதற்குப் பல காரணங்கள் உண்டு.

அதில் ஒன்று, எங்களை விட அவர்கள் பரவாயில்லை என்ற முடிவுக்கு நம் தமிழ் மக்கள் வந்துவிட்டனர் என்பது.

இரண்டாவது, இப்போது தேசிய மக்கள் சக்திக்கு மூன்று ஆசனங்களை வழங்குகிறோம். இனியேனும் தமிழ் அரசியல்வாதிகள் திருந்த வேண்டும்.

நீங்கள் திருந்தாவிட்டால், நடைபெறப் போகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியிடம் எமது உள்ளூராட்சி சபைகளையும் கையளித்துவிடுவோம் என்ற செய்தியை உரக்கச் சொல்வது.

இதுதவிர, வடக்கு மாகாணம் உள்ளிட்ட தமிழர் தாயகத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்பதில் என்.பி.பி மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அதற்கான வேலைத்திட்டங்களும் நடந்தாகின்றன.

ஆக, உள்ளூராட்சி சபைகளையும் தமிழ் அரசியல் தரப்புகள் கைவிட நேரிட்டால், பின்னர் வடக்கு மாகாண சபை எந்தவித இட்டல் இடைஞ்சலும் இல்லாமல் என்.பி.பியிடம் போய்ச் சேர்ந்துவிடும்.

அதன் பின்னர்தான் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு நாங்கள் கேட்டது மாபெரும் தவறு என்று நினைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

எனவே யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு தமிழ்த் தரப்புகள் செயலாற்றுவது அவசியம்.

இதுஒருபுறமிருக்க, எங்கள் தேசத்தை காப்பாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

நாங்களே எங்களை அழிப்போமாக இருந்தால், அதைவிட்ட கொடுமை வேறு எதுவுமாக இருக்க முடியாது.

இங்கு எங்கள் தேசத்தை நாங்கள் காப்பாற்றுவதாக இருந்தால், முதலில் ஊழலை ஒழித்தாக வேண்டும்.

அதிலும் அரச உயரதிகாரிகள், எங்கள் தமிழ் மண்ணைக் காப்பாற்றுவது கட்டாயம் என நினைக்க வேண்டும்.

இந்த இடத்தில் நாம் பல தடவைகள் பிரஸ்தாபித்த விடயம்; எங்கள் அரச அதிகாரிகள் மனம் வைத்தால், எத்தனையோ பிரச்சினைகளுக்கு தென்பகுதியின் உதவியும் ஒத்துழைப்புமின்றி நாங்களே தீர்வு காண முடியும்.

அதைச் செய்வதற்கு தமிழ் இனத்தை நேசிக்கின்ற அரச அதிகாரிகள் தேவையாக உள்ளனர்.

இத்தகைய இனப்பற்று நம்மவர்களிடம் இருந்தால், ஊழல் என்பது அடியோடு இல்லாமல் போகும். இது சத்தியம்.

# குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாட்டம் நடவடிக்கை எடுக்க ஏன் தயக்கம்

## அநுர அரசிடம் பொன்சேகா கேள்வி

கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கத்தயங்குவது ஏன்? என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த ஆட்சியில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள், மக்களை வதைத்தவர்கள் மற்றும் மக்களைப் படுகொலைசெய்தவர்கள் அரசியலில் இருந்து மக்களால் ஒதுக்கப்பட்டாலும் அவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றார்கள்.

அவர்களுக்கு எதிராக அநுர அரசு ஏன் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை? வாக்குமூலம் என்ற பெயரில் ஒரு சிலர் மாத்திரம் விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களும் வெளியில் வந்து வீரவசனம் பேசிக்கொண்டு திரிகின்றார்கள்.

ஊழல், மோசடிக்கு முற்றுப்புள்ளி வைப்போம், மோசடியாளர்களையும் கொலையாளிகளையும் சிறையில் அடைப்போம் எனத் தேர்தல் காலங்களில் மக்கள் முன்னிலையில் பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்த அநுர தரப்பினர் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்? அவர்கள் வழங்கிய உறுதிமொழிகளைவிரைவாக நிறைவேற்ற வேண்டும் என்றார். (ம-7)

# சுண்ணக்கல்லுடன் வாகனத்தை விடுவித்த சாவகச்சேரி நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 2ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனினால் வழிமறிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சுண்ணக்கற்களை ஏற்றிச்சென்ற பாரவூர்தி நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தினால் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பாரவூர்தியின் சாரதி சார்பாக முன்னிலையான சட்டத்தரணி குருபரனினால் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவே குறித்த சுண்ணக்கல் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளதாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விவகாரம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் சட்டத்தரணி குருபரனினால் நீதிமன்றக் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாரவூர்தி மற்றும் சுண்ணக்கற்களை விடுவித்த நீதவான், வழக்கு விசாரணைகளை எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (ம-7)

# இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதிமேலும் குறைவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது நேற்று முறையே 291.32 ரூபாவாகவும், 299.92 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 289.72 ரூபாவாகவும் 298.41 ரூபாவாகவும் காணப்பட்டது.

மத்திய கிழக்கு உட்பட ஏனைய பிரதான நாடுகளின் நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வீழ்ச்சி கண்டுள்ளது. (ம-7)

### வெளிநாடு செல்வதற்காக

# ஐஸ் விற்பனையில் ஈடுபட்ட பல்கலை மாணவன் கைது

ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட தனியார் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹங்வெல்லப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் ஹங்வெல்லப் பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய பல்கலைக்கழக மாணவனே கைது செய்யப்பட்டுள்ளான்.

கைதான பல்கலைக்கழக மாணவன் வெளிநாடு செல்வதற்காக ஐஸ் போதைப்பொருட்களை விற்பனை செய்து பணம் சம்பாதித்துள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும் இந்த மாணவன் பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான லலித் கன்னங்கர என்பவருக்குச் சொந்தமான ஐஸ் போதைப் பொருளை ஹங்வெல்ல, கொஸ்கம, பாதுக்க மற்றும் ஹோமாகம ஆகிய பிரதேசங்களில் விற்பனை செய்து வந்துள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

# சபையில் அர்ச்சுனா எம்.பி உரையாற்ற நேரம் ஒதுக்கவில்லை

## ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்றில் தான் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்குவதில் தமக்குத் தொடர்ந்தும் சிக்கல்கள் இருப்பதாக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அர்ச்சுனா எம்.பி ஆளும் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களினது பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் உள்ளது.

அதற்கான நடவடிக்கையை சஜித் பிரேமதாஸ எடுக்கவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்தது மேலே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீடு செல்வதற்கு இல்லை.

தனக்கு உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் பாராளுமன்றம் வந்தும் பயனற்ற நிலைமையுள்ளது என்றார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் கயந்த கருணாதிலக்க இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடியிருப்பதாகவும் இந்த விடயத்தில் சபாநாயகரின் அறிவுறுத்தலுக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தலை சபாநாயகர் வழங்கியபோதும் அதற்கான நடவடிக்கையை சஜித் பிரேமதாஸ எடுக்கவில்லை எனவும் அர்ச்சுனா எம்.பிகுற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ன எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவுக்கு இது தொடர்பில் உரிய கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம்.

அர்ச்சுனா எம்.பியின் விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து தீர்வு வழங்க விசேட குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி – I

07

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இதனடிப்படையிலேயே 2012 ஆம் ஆண்டு தொகுதி வாரியும் விகிதாசாரமும் இணைந்த கலப்பு முறை அறிமுகம் செய்யப் படடது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையினுள் வாக்கெடுப்பு மாவட்டம் பரந்த நிலப்பகுதியினுள் வியாபித்து காணப்பட்டமையினால், அதுவரை மக்களுக்கு பழக்கப்பட்டு காணப்பட்ட வட்டாரத்திற்கு அல்லது தொகுதிக்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினர் இல்லாமை காரணமாக சாதாரண வாக்காளர்களுக்கு தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு நிரந்தர பிரதிநிதியொருவர் இருக்கவில்லை.

இத்தேர்தல் முறை குறித்தும் சமூகத்தில் வெள்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. விருப்பு வாக்கு முறை தொடர்பிலேயே மிக முக்கிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டன. இத்தேர்தல் முறைக் கூடாக பணம்படைத்தவர்கள், அதவாது அதிக பணத்தை செலவளிக்கும் வேட்பாளர் பிரநிதிகளாக தெரிவாகினர். இறுதியில் அது பாராதூரமான அழிவுகளை நோக்கி நாட்டை தள்ளியது. இம்முறைக் கூடாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் பணத்தை செலவுசெய்து விருப்பு வாக்குகளை பெற்று மக்கள் பிரதிநிதிகளாக தெரிவானார்கள்.

இறுதியில் தேர்தலுக்கு செலவு செய்த பணத்தை ஈட்டிக்கொள்வதற்கு குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். வாக்குகளுக்காக வேண்டி ஒரே கட்சியை சேர்ந்த வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்யும் நிலையையும் இத்தேர்தல் முறையே ஏற்படுத்தியது. 1977 வரையில் நிலவிய தேர்தல் முறையை விட விகிதாசார தேர்தல் முறையில் ஒரு சில நல்ல அடையாளங்கள் காணப்பட்டாலும், அது நாட்டிற்கு மிகவும் பொறுத்தமான தேர்தல் முறையாக அமையவில்லை. இதனால் இது குறித்து சமூகத்தில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட ஆரம்பித்திருந்தது.

புதிய தேர்தல் முறைமையொன்று தொடர்பாக பாராளுமன்றத் தெரிவு குழுவினால் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கௌரவ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இத்தெரிவுக் குழுவின் முன்மொழிவுகளின் பயனாக கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட முதலில் கம்பத்தைக் கடத்தல் முறைமையில் (FPP) மற்றும் விகிதாச்சார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை (PR) முறைகள் இரண்டினதும் சாதகமான அம்சங்களை ஒன்று சேர்த்து புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதனை ஆரம்பமாக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலில் அறிமுகம் செய்வதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டது.

புதிய கலப்புமுறை உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட மூலம் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவுடன் 10/10/2012 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பு எதுவும் இன்றி திருத்தங்களுடன் தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு, இதனூடாக உள்ளூராட்சி தேர்தல்களில் விருப்பு வாக்கு முறை முற்றாக ரத்துச் செய்யப்பட்டது.

அதற்கமைய 2012 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச் சட்டத்தின் மூலம்) உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் வட்டார மற்றும் விகிதாசார முறைகளின் அம்சங்கள் இரண்டையும் உள்ளடக்கிய கலப்பு முறையில் நடாத்த முடியுமென சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1987 இல் உள்ளூராட்சி அதிகார சபைகள் தாபிக்கப்பட்ட போது நாட்டில் 12 மாநகரசபைகளும், 39 நகரசபைகளும் இருந்தன. பிரதேச சபை சட்டத்தின் மூலம் நாட்டில் 257 பிரதேச சபைகள் புதிதாக உருவாக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்கள் தொகை 4354 ஆக இருந்தது.

2013இல் 336 உள்ளூராட்சி அதி கார சபைகள் செயற்பட்டன. அதா வது அவை 23 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 272 பிர தேச சபைகள் மற்றும் அவற்றின் மொத்த பிரதிநிதிகளின் எண்ணிக்கை 4,486 ஆகும். அவை மாவட்ட ரீதியில் கீழே காட்டியது போல் பிரிக்கப்பட்டிருந்தன. அடைப்புக் குள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை கூறப்பட்டுள்ளது.

கொழும்பு ([illegible]), கம்பஹா (354), களுத்துறை (235), கண்டி (338), மாத்தளை(156), நுவரெலியா(140), காலி(244), மாத்தறை(200), அம்பாந்தோட்டை(141), யாழ்ப்பாணம்(224), கிளிநொச்சி (38), மன்னார்(46), வவுனியா(52), முல்லைத்தீவு(38), மட்டக்களப்பு (128), அம்பாறை(201), திருகோணமலை(118), குருநாகல்(340), புத்தளம்(161), அநுராதபுரம்(203), பொலநறுவை(91), பதுளை(215), மொனறாகலை(104), இரத்தினபுரி(229), கேகாலை(195), மொத்தம் 4486 ஆகும்.

இக் காலகட்டத்தில் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் போது (சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப) சமநிலை காணப்படாமல் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அதாவது ஒவ்வொரு சபைக்குமான உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு அடிப்படை நிபந்தனைகளைக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. அதாவது சில உள்ளூராட்சி அதிகார சபைகள் சிறியனவாக இருந்த போதும் அச் சபைகளிலுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது.

### உள்ளூராட்சி அதிகாரசபைகளை வட்டாரங்களாகப் பிரித்தல்

உள்ளூராட்சி அதிகார சபைகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் ஒவ்வொரு உள்ளூராட்சி அதிகார சபைக்குமுரிய வட்டாரங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வட்டாரங்களின் எல்லைகளை வரையறை செய்வதற்காக ஜயலத் ரவி திசாநாயக்க அவர்களின் தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது.

இக் குழு, பலரின் பரிந்துரைகளில் கூறப்பட்ட எல்லா விடயங்களையும் கருத்தில் கொண்டு, 5000 உறுப்பினர்களை வட்டார மட்டத்தில் நிறுவுவதற்கான பரிந்துரையை ஏற்றுக் கொண்டது. இது தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இல்லாத காரணத்தால் குழு அதனை ஏற்றுக்கெண்டது.

இது அப்போதிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட (4486) கிட்டத்தட்ட 11% அதிகரிப்பாகும். இதன் அடிப்படையில் மாவட்ட ரீதியாக ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்த உள்ளூராட்சி அதிகார சபைகளின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு: கொழும்பு (329), கம்பஹா (395) , களுத்துறை (262), கண்டி(377), மாத்தளை(174), நுவரெலியா(156), காலி(272), மாத்தறை(223), அம்பாந்தோட்டை(157), யாழ்ப்பாணம்(250), கிளிநொச்சி(42), மன்னார்(51), வவுனியா(58), முல்லைத்தீவு(42), மட்டக்களப்பு(143), அம்பாறை(224), திருகோணமலை(132), குருநாகல்(379), புத்தளம்(179), அநுராதபுரம்(226), பொலநறுவை (101), பதுளை(240), மொனறாகலை(116), இரத்தினபுரி(255), கேகாலை(217), மொத்தம் 5000 ஆகும்.

இவ்வாறு பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்டபோதும் மாவட்டங்களுக்கு இடையே சனத்தொகை அதிகரிப்பு வீதம் 2012இல் வேறுபட்டு காணப்பட்டது. சனத்தொகை அதிகரிப்பு வீதம் பின்வருமாறு இருந்தது.

கொழும்பு (11.38%), கம்பஹா (20.91%) , களுத்துறை (8.08%), கண்டி(4.37%), மாத்தளை (2.16%), நுவரெலியா (4.80%), காலி (4.16%), மாத்தறை (2.01%), அம்பாந்தோட்டை (2.84%), யாழ்ப்பாணம் (-6.49%), கிளிநொச்சி (0.43%), மன்னார்(-0.59%), வவுனியா(1.61%), முல்லைத்தீவு (0.08%), மட்டக்களப்பு(3.58%), அம்பாறை(5.04%), திருகோணமலை (2.09%), குருநாகல் (6.59%), புத்தளம் (5.08%), அநுராதபுரம்(4.76%), பொலநறுவை(2.68%), பதுளை(3.44%), மொனறாகலை(3.11%), இரத்தினபுரி(5.07%), கேகாலை (2.82%).

ஆரம்பத்தில் 5000 வட்டார உறுப்பினர்களை நியமிப்பதற்கு உத்தேசித்திருந்தபோதும் சனத்தொகை அதிகரிப்பு வீதத்தை அடிப்படையாகக்கொண்டு சில மாவட்டங்களுக்கு உத்தேசித்த வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தும் சில மாவட்டங்களுக்கு உத்தேசித்த வட்டாரஉறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கை சீர் செய்யப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகரில்...

தலைமறைவாக இருந்த குறித்த நபர்கள் யாழ்.நகரில் நடமாடுவதாக யாழ்.மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.நகரில் புத்தாண்டுக்கு முன் தினம் (31) இரவு வேளை ஒன்றுகூடிய இளைஞர் குழுவினர் முச்சக்கர வண்டியில் சாகசம் காட்டியதுடன் இளைஞர் ஒருவரைக் கடுமையாகத் தாக்கியிருந்தனர்.

இதுதொடர்பிலான காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை சந்தேகத்தின் அடிப்படையில் நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு முச்சக்கர வண்டிகளும் கைப்பற்றப்பட்டது.

இந்நிலையில் நேற்று மூவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## முகமாலையில்...

வெள்ள நீரில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## மேலதிகமாக...

யாழ் - கொழும்பிற்கு ஒரேயொரு புகையிரத சேவை மட்டும் இடம்பெற்று வருவதால் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் பொதுமக்களினால் என்னிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக ஆராய்ந்திருந்ததுடன், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

எனது வேண்டுகோளிற்கு அமைவாக 15ஆம் திகதியில் இருந்து ஒரு புகையிரத சேவையும் 31ஆம் திகதியில் இருந்து பிறிதொரு புகையிரத சேவையும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்ததாகப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தெரிவித்தார். (ம-7)

## இந்து மத...

வில் மீளாய்வு நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் மீளாய்வு செய்வதற்குச் சென்ற கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த குறித்த இந்து மதக் குரு அங்கிருந்த ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

குறித்த குருக்கள் அணிந்திருந்த உருத்திராக்க மாலை மற்றும் தங்கச் சங்கிலி என்பனவும் அறுத்து வீசப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. (ம-7,315)

## இந்திய...

அவர் நடத்திய சந்திப்பிலேயே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்திற்கான சரியான நேரத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம் என்றும் சந்தோஷ் ஜா கூறியுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, கடந்த டிசம்பர் மாத நடுப்பகுதியில் புதுடில்லிக்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டிருந்தபோது, பாரதப் பிரதமர் மோடியை இலங்கை வருமாறு அழைப்பை விடுத்திருந்தார். அதன் பிரகாரம் மோடியின் இலங்கைப் பயணம் இடம்பெறவுள்ளது. (ம-7)

## மக்கள்...

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் கேந்திர ஸ்தானமாக, இந்த உயரிய பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு தனித்துவமானதொன்றாகும். வெறும் கோஷங்களுக்குச் சுருங்கிப் போகாது, புதிய அரசியல் கலாசாரத்தின் ஊடாக மக்களின் எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் நிறைவேற்றப்படும். மக்கள் சார் அரசியல் கலாசாரத்தை உருவாக்கப் பாராளுமன்றத்திலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார். (ம-7)

## யாழ்.சர்வதேச...

பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள விமானப் பயண நேர அட்டவணைக்கமைவான விமான சேவைகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள புறப்படுதல் வரியில் 50% வீதக் கட்டணத்தை கையுதிர்க்கும் சலுகையை 2026.01.30ஆம் திகதி வரை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நிறுத்தப்பட்ட...

தெரிவித்துள்ளார்.

அதன்படி இடைநடுவில் நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளின் பணிகளை நாங்கள் தற்போது மதிப்பாய்வு செய்து வருகிறோம். பல பாடசாலைகளில் அந்தத் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனை மீண்டும் ஆரம்பத்திலிருந்து செய்ய வேண்டும் என நாங்கள் நம்பவில்லை எனத் தெரிவித்த பிரதமர், தற்போது பாதியில் இடை நிறுத்தப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் பாடசாலைகளைத் தேர்வு செய்து பணிகளை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## கொழு...

அதிகரித்துள்ளது.

இதில் 36 மற்றும் 20 வயதுடைய இருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் வீட்டில் இருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், மற்றவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ம-7)

## வழங்...

தொழிற்துறையினரும் அரசாங்கத்துக்கு வாக்களித்தனர்.

எனினும் தற்போது ஒரு இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டும்போது அறவிடப்படுகின்ற வரிக்கான எல்லையை ஒரு இலட்சத்து 50,000 ரூபாய் வரையில் மாத்திரமே அதிகரிக்க முடியும் என அரசாங்கம் கூறுகின்றது.

பால், முட்டை உள்ளிட்ட உணவுகள், மருந்துகள், பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்டவற்றுக்கான வற் வரி நீக்கப்படும் என அறிவித்திருந்தனர்.

எனினும் தற்போது பல உணவுப் பொருட்களுக்கு விசேட பண்ட வரியை அறவிடுவது தொடர்பான யோசனை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி பருப்பு, சீனி, செமன் ரின் உள்ளிட்ட இறக்குமதி செய்யப்படும் சகல உணவுப் பொருட்களுக்கும் அறவிடப்பட்ட வரியைத் தொடர்ந்தும் அவ்வாறே முன்கொண்டு செல்வதற்குக் கோருகின்றார்கள்.

இருப்பினும் தேர்தலுக்கு முன்னர் வரியை நீக்குவதாகவே இவர்கள் உறுதியளித்திருந்தனர் என்றார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.01.07
சீட்டிழுப்பு இலக்கம் 5709
M 0 9 0 8 8 5
அத சம்பத
M 0 8 8 5
சீட்டிழுப்பு இலக்கம் 284
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1739
A 08 51 59 66 A
Double Chance 25485

மெகா பவர்
திகதி 07/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2057
I 17 23 57 60 72

லக்கி 7 VIP
திகதி 2025.01.07
சீட்டிழுப்பு இலக்கம் 535
U 9 4 6 5 7 3 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3951
சீட்டிழுப்பு திகதி 07.01.2025
A 05 16 43 65
A

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.07
சீட்டிழுப்பு இலக்கம் 1018
சிம்மம் 03 20 23 40 சிம்மம்
41429 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
07.01.2025 வெற்றி வாரம் 417
R 3 0 2 5 8 7
99247
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,691,021.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2683
சீட்டிழுப்பு திகதி 2025.01.07 தினம் செவ்வாய்க்கிழமை
06 24 54 76 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,530,830.40
DLB

சனிதா
திகதி 07.01.2025 வெற்றி வாரம் 4844
15 17 29 73 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,083,867.20
71363
DLB

சசிரி
வெற்றி வாரம் 595
சீட்டிழுப்பு திகதி 07.01.2025
செவ்வாய்க்கிழமை
21 34 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4395
சீட்டிழுப்பு திகதி 07.01.2025 தினம் செவ்வாய்க்கிழமை
12 41 43 51 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,632,136.80
163823
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 23 14 37 39 75
1859
07.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,122,924.20
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2509
சீட்டிழுப்பு திகதி : 2025.01.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,813,900.80
09 33 39 58 V
927161
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1977)

076 825 7716 (ஆகாஸ்)



## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Scooty pep மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : (2959)

075 887 5036



## யோக்கட் கொள்வனவுகள்

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். (521)
அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.

48/= ~~80/=~~

Happy Supermarket
உரும்பிராய்

+94 76 800 65 00



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல Fancy Shop ஒன்றிற்கு வேலையாட்கள் (பெண்கள்) தேவை.

- காசாளர்
- விற்பனைப் பிரதிநிதி

(C-1973)

தொடர்புகளுக்கு : 076 444 9377



அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

## றோயல் நெய்

Royal

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.



(C-1972)

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க் கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

Marketed By :-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

Packed By:-
Royal Industries®



## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1976)



## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக
ரூபி விலாஸ் (2927)

075 353 1367, 077 844 9861



## சனல் ஆடுகள் விற்பனைக்குண்டு

- கடாய் 01 வருடம் ஒன்றின் விலை - 70,000/=
- கன்னி ஆடு 02 மாதம் குட்டித்தாச்சி - 60,000/=
- 02 குட்டியுடன் 02ம் ஈற்று ஆடு - 80,000/=

(2957)

076 234 6416, 021 225 1380


# மரண அறிவித்தல்



மண்ணில்
1943 - 04 - 15

விண்ணில்
2025 - 01 - 06

## திரு. யோசப் தேவதாஸ்

### (ஓய்வு நிலை ஆசிரியர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.யோசப் தேவதாஸ் அவர்கள் 06.01.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் - அருளம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பெனான்டோ - அன்ரனிக்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ராஜினி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான விக்டர், சந்தியாப்பிள்ளை மற்றும் லூர்த்துமலர், அன்ரன், பீற்றர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜீவானந்தன், ஷோபனா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபன், சோபியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ராகுலன், கோகுலன், தானியா, லவிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 08.01.2025 புதன்கிழமை பி.ப 02.00 மணியளவில் திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்கு யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
வேளாந்தோப்பு.
(C-1971)

077 607 1954
077 923 2365

தகவல் :
குடும்பத்தினர்


## வீடு, காணி தேவை

அரியாலை பூம்புகார் சந்தியில் இருந்து மாம்பழம் சந்தி வரையான A9 றோட் ஓரமாக 3 அல்லது 4 பரப்பு காணி தேவை.
உரும்பிராய் பகுதியில் வீடு தேவை.
உரிமையாளர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (2954)

076 742 4301, 075 710 9639
whatsapp : +94 757 109 639, Viber : +94 719 646 619

Easy Real Estate



## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிக சாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வையிடும் நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

(2940)

தொடர்புகளுக்கு :

070 290 2338, 076 017 1105



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்

## பகிரங்க ஏல விற்பனை

பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

01. பழுதடைந்த அலுமினியப் பொருட்கள்
02. பழைய இரும்பு
03. போத்தல்கள்

இடம் : வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
காலம் : 12.01.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 09.00 மணி

கிழமை நாட்களில் பொருட்களை பார்வையிட முடியும்.

தொடர்புகட்கு :

077 375 7448 தலைவர்
077 936 2643 செயலாளர்
076 182 8750 பொருளாளர்
024 324 3558 காரியாலயம்

(C-1975)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 1, ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org